DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 20/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திரு.பாலகணேசன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.11.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th **November 2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

முதல்விசாரணை:

நான் தற்போது சங்கரன்கோவில் நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சின்னகோவிலான்குளம் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது 21.01.2014 ம் தேதி காலை 9 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின்பேரில் அங்கு சென்றபோது அங்கு சிகிச்சையில் இருந்த பூமாரி என்பவர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. நான் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றுஅங்கு பூமாரி என்பவர் சுய நினைவில்இல்லாததால் அவருடைய கணவர் கருப்பசாமி என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் திரும்பி அதன்தன்மைக்கேற்ப

காவல்நிலையக்குற்ற எண்.15/2014 ச/பி. 287, 337 இதச படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகும். முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அசல் நகலை சங்கரன்கோவில் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தும், ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு கருப்பசாமி என்பவரிடம் புகார்வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், அதன் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும், புகார் வாக்குமூலம் காவல்நிலையத்தில் பொய்யாக ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**